புலம் பெயர்ந்த ஈழத்து இதயங்கள்

டாக்டர் ப.செந்தில்நாதன்,
உதவிப் பேராசிரியர்,
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி)
பெரம்பலூர் 621 220.

ஆய்வுச் சுருக்கம்

மனிதனின் மகத்தான கண்டுபிடிப்புகளில் தலையாயது மொழியே ஆகும். உள்ளத்து உள்ளதைத் தெற்றெனத் தெரிவிக்கும் சாதனம் மொழி. . மொழி மட்டும் இல்லாதிருந்தால் உலகம் வெற்று ஒலிகளாலேயே நிரம்பி இருந்திருக்கும். மொழியிலிருந்தே ஏனைய அனைத்துக் கலைகளும் உருவாகின என்று கூறலாம். விளங்க வைக்க வேண்டிய இடத்தில் விளக்கமாகவும், சுருங்கச் சொல்ல வேண்டிய இடத்தில் சுருக்கமாகவும் சொல்லி விளக்குவதற்கு மொழியே அடிப்படையாகிறது. சுருங்கச் சொல்லும் மொழி வடிவம் கவிதை. ஏனையவை விளங்கச் சொல்லும் வடிவங்கள். தமிழில் ஒருவரிக் கவிதையான ஆத்திச்சூடி முதல் 786 அடி கவிதையான மதுரைக்காஞ்சி வரை அடி வரையறையில் மாறுபட்ட வடிவங்களைக் கொண்ட எண்ணற்ற கவிதை வடிவங்கள் உள்ளன . படைப்பாளன் தன் எண்ணத்தைத் துல்லியமாகவும் கூர்மையாகவும் வெளிப்படுத்த கவிதை வடிவத்தையே தேர்கிறான்.

அவ்வகையில் சங்க இலக்கியம் முதல் சமீபகால இலக்கியங்கள் வரை விரவிக் கிடக்கும் கவிதைகளில் புலம்பெயர் படைப்பாளர்களின் கவிதைகள் தனித்த கவனம் பெறுகின்றன. குறிப்பாக ஈழம் சார்ந்த புலம்பெயர் படைப்பாளுமைகளின் "இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ்க் கவிதைகள்" என்ற நூல் சிறப்பிடம் பெறுகிறது. தொகுப்பில் இடம் பெற்றுள்ள பெண் கவிஞர்களின் கவிதைகளின் பாடு பொருள் பற்றி பகுப்பாய்வு அணுகுமுறையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

ABSTRACT

Language is the foremost of man's greatest inventions. Language is a means of conveying what is within. Language If not for that, the world would be filled with empty sounds, would have been. All other arts from the language itself It can be said that they evolved. Where to explain to explain and summarize where you need to go for a contraction Language is the basis for telling and explaining. "Poetry is the form of a language that is short- spoken. Others to explain Telling patterns. Aathichudi, a one-line poem in Tamil The 786-foot poem Madurai Kanchi is different in the definition of feet There are countless forms of poetry that have patterns. The Creator can make his thoughts accurate and sharp Chooses the form of poetry to express. 'In this way, from Sangam literature to recent literature. In the poems that are scattered up to

the Diaspora of the creators Poems receive special attention. Especially eelam-oriented The "20th century Eelam Tamil & quote; of Diaspora creations The book & quote; Poems & quote; occupies a special place. Location in the collection about the subject matter of the poems of the women poets who have received this paper is based on an analytical approach.

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு விளக்கமுறை ஆய்வாகவும், திறனாய்வு முறை ஆய்வாகவும், சமுதாயவியல் ஆய்வாகவும் அமைகின்றன.

ஆய்வு கலந்துரையாடல் மற்றும் பயன்கள்

இவ்வாய்வானது, 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்' எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு சில பெண் ஆளுமைகள் தன்படைப்புகளில் வாழ்வியல் துயரங்களை, அவலங்களை உரையாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

இவ்வாய்வின் மூலம் அதிக கலைச்சொற்களையும், கற்பனை ஆற்றலும், சொல் ஆளுமையினை வளர்த்துக் கொள்ள இயலும்.

முன்னுரை;

தமிழ் இலக்கியம் எண்ணற்ற வகைகளை கண்டிருக்கிறது. காதல், வீரம், கொடை, போர், விருந்தோம்பல் இயற்கை, உறவுகள் என பட்டியல் நீள்கிறது. இவற்றுள் சொல்லப்படாத சொல்ல வொண்ணாத உணர்வுகளைக் காட்சிப்படுத்தும் இலக்கிய வகையாகப் புலம்பெயர் இலக்கியங்கள் விளங்குகின்றன. குறிப்பாக, ஈழத்தமிழரின் படைப்புகளில் வாதை மிகுந்திருப்பதை மறுக்கவியலாது. ஈழ மண்ணிலிருந்து இதர தேயங்களில் அடைக்கலமாகவும், அகதியாகவும், சென்று சேர்ந்தவர்களின் படைப்புகளில் தெறிக்கும் அவர்களது வாழ்க்கைப் பாடுகள் நினைத்தும் பார்க்க இயலாதவை. வேறு மண்ணில் குடியேறினாலும் நினைவுகளைச் சுமந்து சென்றிருக்கும் அவர்களது எண்ண ஓட்டங்கள், துயரங்கள் பாரிய சுமையானவை. பலர் ஈழ மண்ணிலேயே இருந்து கொண்டும், தமது வாழ்க்கை அவலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

அந்த வகையில் 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்' எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு சில பெண் ஆளுமைகளின் படைப்புகளில் காணலாகும் வாழ்வியல் துயரங்களை, அவலங்களை வெளிக்கொணரும் வகையில் இவ்வாய்வு அமைகிறது.

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ஆளுமைகள் மற்றும் அவர்களது கவிதை தலைப்புகள்;

1. அருந்ததி - முகங்களும் திரைகளும்
2. ஆழியாள் - பதில், மன்னம் பேரிகள்,
3. ஊர்வசி - இடையில் ஒரு நாள், வேலி, அவர்களுடைய இரவு.
4. ஔவை - எதை நினைந்து அழுவதும் சாத்தியமில்லை.

5. கலா - கோணேஸ்வரிகள்.

மேற்கண்ட கவிதைகள் யாவும் உளவியல் பார்வையில் வாசிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

அருந்ததி;

உள்ளக்கருத்தை உரைப்பதற்கான சரியான வடிவம் கவிதை எனலாம். நீண்ட பத்திகளில் சொல்லி விளங்க வைக்க முடியாததை ஒரு சில வரிகளில், வார்த்தைகளில் வெளிப்படுத்திட ஏதுவானது கவிதை ஆகும்.'முகங்களும் திரைகளும்' என்ற தன் கவிதையில் கவிஞர் அருந்ததி போருக்கு பிந்தைய தங்கள் வாழ்வினைச் சூட்சுமமாய் எடுத்துரைக்கிறார். மக்களின் கனவுகள் கலைந்து போயின. ஆயினும் காலம் மாறும். பருவம் வரும். மரங்கள் மீண்டும் துளிர்க்கும். இப்போதோ, நம்பிக்கை மீது நம்பிக்கை இழந்து விட்ட துயரம். இதயங்கள் கனத்துப் போயின. திரைகளைப் போர்த்திக் கொண்டு விட்டன. புலம் பெயர்ந்து செல்லும் மக்கள் தமது சந்ததிகளை அந்தந்த தேசங்களில் நிலைநாட்டுவர். பட்டுப் போகாது. மீண்டும் துளிர்க்கும் என்பதான நம்பிக்கையை வெளிப்படுத்தும் அதே வேளையில் முகங்கள் அழுக்காகிப்போயின என்றும் கூறுகிறார். மேலும், வாழ்வதற்கு உகந்த உலகம் வாழ்க்கை எது என்ற கேள்வியையும் எழுப்புகிறார். இதனை,

"இலைகளை உதிர்க்கும் போதே
இங்கே துளிர்க்கும் நம்பிக்கையோடு
மரங்கள்
ஒவ்வொரு பருவ காலங்களிலும்
ஒவ்வொரு உயிர்ப்பு"

"ஆணிவேர் தரித்து
அலங்காரம் செய்து
எங்கெங்கோ
மரம் நாட்டினோம்.
முளை விட்டவை தவிர
கருகிப்போனவையும்
இவற்றில் அதிகம்.
சூரியன் இடம் பெயர்ந்து விட்ட
பின்னரும்
எம் தேசத்தில் முளை விடும்
விதைகள்.
இன்னும் எந்த காற்று
எங்கெல்லாம் அவற்றை
எடுத்துச் சென்று புதைக்குமோ?"

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2022, IRJTSR

"எந்த உலகம் உன்னதமானது?
எந்த வாழ்க்கை உயர்ந்தது?
கேள்விகள் அனைத்தும்
அர்த்தங்கள் இறந்துபோக,
புத்தகங்களை
நெருப்புத் தின்கிறது" (.ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

என்கிற வரிகளில் வெளிப் படுத்துகிறார். இதனால், புலம்பெயர இயலாது வாழ்வைத் தொலைத்த மக்களின் இன்னல்களை உணர முடிகிறது.

ஆழியாள்;

இவரது கவிதைகள் தனித்துவமானவை. பெண்மொழி மிளிர்பவை 'பதில்' எனும் கவிதை சமூகத்திற்கான சாட்டையடியாய் உள்ளது. காலங் காலமாய்ப் பெண்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் அவலத்திற்கான பதிலடியாய் இக்கவிதை பரிணமிக்கிறது. பெண்களுக்கான கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுவதைச் சுட்டுகிறார். பெண்களுக்கேயுரிய பிரத்தியேக மொழியில்தான் அவளின் உண்மைத் தன்மையை நிறுவமுடியும் என்கிறார்.

"என் ஆதித்தாயின்
முதுகில் பட்ட
திருக்கைச் சவுக்கடி
நான் காணும் ஒவ்வொரு
முகத்திலும்
தழும்பாய்த் தேமலாய்ப்
படர்ந்து கிடக்கிறது"

"அங்கு எனக்கென
ஓர் பிரபஞ்சம் உருவாகும்
அப்போது உயிர்பெறும்
எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய
என் மொழி.
அதன்பின்
தேமல் படர்ந்த எவனாயினும்
என்னோடு உரையாடட்டும்.
அப்போது கூறுகிறேன்
பதிலை,
என் மொழியில்...
என் ஆதித்தாயின்
பெண் மொழியில்" (.ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

என்ற வரிகளில் கேள்விக்குப் பதில் தருகிறார். இன்றைய பெண் கவிஞர்கள் தமக்கெனத் தனித்த மொழி நடையைக் கையாள்வதை இதன்மூலம் அறியமுடிகிறது. இவரது மற்றொரு கவிதை 'மன்னம் பேரிகள்' என்பது. இக்கவிதை பலராலும் பேசப்பட்ட ஒன்றாகும். கதியற்ற பெண்கள் இருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு இறந்துபோன கொடூர நிகழ்வினைத் தனது கவிதையில் பதிவிட்டுள்ளார். அதே எண்ணமுடைய மிருகங்களின் பார்வையைத் தான் கடந்து போன நிலையையும், அவர்களின் வலியைத் தானும் உணர்ந்ததாகவும் குறிப்பிடும் ஆழியாள் 'மன்னம்பேரி, கோணேஸ்வரி' என்ற இரு பெண்களுக்கு நிகழ்ந்ததைப் பதிவு செய்திருக்கிறார்.

"தந்திக் கம்பத்தருகே
கால் தூக்கியபடிக்கு
என்னை உற்றுக் கிடக்கும்
அம்மிருகம் துயின்று
நாட்கள் பலவாகியிருக்கும்.

அவற்றின் பாலைத்தாகம்
அறியாப் பாஷையை
எனக்குள் உணர்த்திற்று.

அழகி மன்னம் பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்
இது இருக்கும் என
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்.
அன்றைய அலைச்சலும்
மனக் குமைச்சலும் கூடிய
துக்கத்தின் இடையில்-நானும்
அவள்களுக்குப் புரிந்த
அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாஷையைப் புரிந்து கொண்டேன்". (.ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

மன்னம்பேரி என்பவள் 1 971ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியில் பங்கு கொண்டவள். பெண்கள் அணிக்குத் தலைமை தாங்கியவள். 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-இல் மன்னம்பேரி படையினரால் கைது செய்யப்பட்டு, பாலியல், வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டாள். கோணேஸ்வரி அம்பாறை சென்றல் கேம்ப் 1-ஆம் கொலனியைச் சேர்ந்தவள். 1987 மே 17 இரவு அவளது வீட்டுக்குச் சென்ற படையினர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியபின் அவளின் யோனியில் கிரனெட் வைத்து வெடிக்கச் செய்து சிதறடித்துச் சென்றனர்.

© 2022, IRJTSR

ஈழப் போராட்ட வரலாற்றில் பங்குபற்றிய ஆண்களுக்கு இணையாக, சொல்லப்போனால் அவர்களைவிடவும் கூடுதலான இன்னல்களுக்கும், துயரங்களுக்கும் உள்ளானவர்கள் பெண்களே என்பதற்கு இவ்விருவரின் முடிவுகள் துயரச்சான்றுகள்!

ஊர்வசி;

இயக்கத்திலிருக்கும் ஆணைத் திருமணம் செய்த பெண்ணின் அன்றாடங்கள் எத்தனைத் துயரமானவை என்பதை இவரது 'இடையில் ஒரு நாள்' கவிதை வெளிப்படுத்துகிறது. எப்போதேனும் ஒருநாள் மாறுவேடத்தில் வீட்டிற்கு வரும் கணவனை அடையாளம் கண்டுகொள்ளும் அவனது மனைவி, அவனோடு மகிழ்ந்திருக்கிறாள். துப்பறிந்த ராணுவம் அவனைக் கைது செய்ய வந்து ஏமாந்து போகிறது. அதனால் கோபமுற்ற 'பொலிஸ் படை' அவளது கூந்தல் அவிழ்ந்து விழுகிற வரை விசாரணை செய்யும். அவள் அம்மாவையும் சேர்த்து என்கிறபோது காட்சியைக் கண்முன் நிறுத்துகிறார்.

"உனக்கு மிகவும் பரிச்சயமான
துப்பாக்கியை, துண்டுப் பிரசுரங்களை,
அடர்ந்த காட்டை,
இன்னும் எதையெதையெல்லாமோ
மறந்துபோய்
உனது உடலும், மனமும்
எனக்குள் அடைக்கலமாகும்.
தற்காலிக அமைதியில்
நான் உறங்கும்போது.
ஒரு முரட்டுத்தனமான
கதவுத் தட்டலுக்குச் செவிகள்
விழிக்கும்.
இராணுவக்கும்பல் அல்லது
பொலிஸ்படை.
பிறகு,
கூந்தல் அவிழ்ந்து விழுகிற வரையில்
விசாரணை,
என்னருகே அம்மாவும்
கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்ட
ஓர் அணில் குஞ்சைப்போல...
நீ போய்விட்டாய்
நாள் தொடர்கிறது" (ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

இக்கவிதையின் இறுதி வரிகள் இதயத்தை அறுப்பவை. ஆம் 'நீ போய்விட்டாய், நாள் தொடர்கிறது'. கணவன் இல்லையென்றாலும் நாள்தோறும் விசாரணை நடக்கிறது. இவ்வரிகளூடே மறைந்திருக்கும் வலியை வாசகர்களுக்குக் கடத்திவிடுகிறார்.

'வேலி' என்கிற கவிதையில் முள்வேலி முகாமிற்குள் அடைபட்டிருக்கும் உயிர் ஒன்று தன் துணை இருக்கும் வெளியைத் தேடி அலைகிறது. பழைய பஞ்சாங்கத்துள் நம்பிக்கை தரும் புதிய சொல்லைத் தேடுகிறது. வேலியிலிருந்து வெளியானது நெடுந்தொலைவோ? என ஏங்குகிறது. வேலிக்குள் இரண்டு சிட்டுக்குருவிகளை இல்லையெனினும் இரண்டு வண்ணத்துப் பூச்சிகளையாவது அனுப்பச் சொல்லிக் கெஞ்சுகிறது.

'அவர்களுடைய இரவு' கவிதை, கனதியானது. சிங்கள ராணுவத்தின் ராட்சதக் கைகள் ரத்தத்தைக் குடித்த ரணத்தைச் சொல்கிறது. கணவன் வந்திருக்கும் செய்தி காற்றுவாக்கில் கசிந்து, ராணுவத்தை அடைகிறது, கொடியில் காயும் அவனது வேட்டியும் காட்டிக் கொடுத்து இருக்கலாம். ஐந்து ஜீப்புகளில் வந்த ஐம்பது போலீஸ், ஐம்பது துவக்குகள் அவனை முதுகிட்டு அழைத்துச் செல்கின்றன. அந்தக் கரங்கள் அவளுள் பதிகின்றன.

ஈழத் தமிழச்சிகளை ஈவிரக்கமின்றி விசாரணை என்ற பெயரில் வல்லுறவுக்கு உட்படுத்திய செயலைப் பொறுத்துக் கொண்ட பெண்களின் மரண ஓலமாய் இந்தக் கவிதை...

"சேலைக் கொடியில்
அவனது வேட்டி ஆடும்
நெஞ்சில் திகில் உறையும்
அந்த இரவில்
இருள் வெளியே
உறைந்து கிடந்தது
ஒன்றாய்ப் புழுதி கிளப்பின.
சோகம் விசிறி அடித்தது.
காலைச் சுற்றிய குழந்தை
வீறிட்டு அழுதது.
விடுப்புப் பார்க்க
அயலவர் கூடினர்.
நீட்டிய துவக்குகள்
முதுகில் உறுத்த
அவன் நடந்தான் அவர்களுடன்.
அந்த இரவில்
ஐம்பது துவக்குகள்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு
© 2022, IRJTSR

ஏந்திய கரங்கள்
என்னுள் பதித்த சுவடுகள் மிகவும் கனத்தவை
அந்த இரவு
அவர்களுடையது". (.ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

ஒரு பெண்ணின் வாதையை இதனைவிட காட்சிப் படுத்த இயலாது. 'அந்த இரவு அவர்களுடையது' என்ற வரிகள் திகிலூட்டுபவை.

ஔவை;

இவரது கவிதை வாழ்வின் எதார்த்தத்தைப் பேசுகிறது. கடந்து போனதைப் பற்றி நினைப்பதால் பயனில்லை. அவரவர் செய்த பணியை மறந்து போனதையும், முகமூடிகளைக் கழற்றி வைத்துவிட்டு உண்மை முகங்களை அணிந்து கொண்டதையும் பதிவிடுகிறார். இறுதியில் மனிதத்தின் மீதான நம்பிக்கையே வாழ்விற்கான அடித்தளம் என்றும் கூறுகிறார்.

"இன்றைய வாழ்வை நியாயப்படுத்த,
நேற்றைய வாழ்வைக் கொச்சைப்படுத்தும்
பொய்மைகள் எமக்குள் இனி வேண்டாம்.
மார்க்சியவாதி மறுபிறப்பு பற்றி விவாதிக்கிறார்.
போராட வந்தவள் மனைவியாய்
சமையல் அறையில் அடைபட்டிருக்கிறாள்
புலம்பெயர்வதைத் துரோகமென்றவர்
பெயர்ந்த நிலத்தில் வீடு கட்டுகிறார்.
சித்திரவதை முகாமுக்கு பொறுப்பாக இருந்தவன்
குழந்தை பெறும் மனைவிக்காய் அழுகிறான்
முகமற்றுப் போனவர்கள் யார்?
எதையும் நினைந்தழுதல்
இப்போது சாத்தியமில்லை
மனிதத்தின் மீது நம்பிக்கை கொண்டு
உயிர்த்தெழுதலே வாழ்வு!" (.ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

இவ்வரிகளில் எத்தனைத் துயருற்றாலும், அவற்றையெல்லாம் தாண்டி வாழ்வதற்கு வாழ்வு இருக்கிறது. எஞ்சிய வாழ்வை வாழ வேண்டும் என்ற வாஞ்சை இருக்கிறது. அதுவே மீண்டும் உயிர்த்தெழுதலைத் தூண்டுகிறது. அதுவே மனிதத்தின் மீதான நம்பிக்கையென இறுதி வரிகளில் ஒளி ஊட்டுகிறார்.

கலா;

'கோணேஸ்வரிகள்' எனும் இவரது கவிதை ஆழியாளின் கவிதை ஒத்திருக்கிறது. கவிதையின் கரு கோணேஸ்வரிதான் என்றாலும், தமிழ்ப் பெண்கள் ஒவ்வொருவருமே கோணேஸ்வரிகள் என்கிறார். சிங்களப் பெண்களைச் சாடுகிறார். எள்ளி நகையாடுகிறார் வேதனை கலந்து! கோணேஸ்வரியின் சாவு வேதனையைத் தரவில்லை. மரத்துப்போன உணர்வுகளுள் எங்ஙனம் அதிர்வலைகளை உண்டாக்க இயலும் எனக் கேள்வி எழுப்புகிறார்.

சிங்களத்தின் மதவாதத்தைக் கேலிக்குள்ளாக்குகிறார். அமைதியை விரும்பியவனைத் தலைவனாகக் கொண்டவர்களின் முரணான செயல்களை அங்கதச் சுவையோடு வெளிக்கொணர்கிறார்.

"சமாதானத்திற்காய்ப் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்
பாவம்,
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்?
வீரர்களே! வாருங்கள்.
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்.
அவளோடு நின்று விடாதீர்!
எங்கள் யோனிகள் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.
ஆகவே
வெடி வைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளிப்
புதையுங்கள்...
இனிமேல் எம்மினம் தளிர் விட முடியாதபடி
சிங்கள சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலை இல்லை" (ஸ்ரீ.பிரசாந்தன் .ஆ, அக் 2006.)

புத்தரின் வழிவந்தவர்கள் செய்யும் செயலா இது? மதக் கொள்கைக்கும், செயல்பாடுகளுக்கும் துளிகூட தொடர்பில்லை என்பதை வினவுகிறார். வக்கிரத்தின் உச்சமாகவும் நின்று செயல்படும் சிங்கள வீரர்களைக் காரி உமிழ்கிறார். சிங்களச் சகோதரிகளையும் விட்டுவைக்கவில்லை.

அனுதினமும் வேதனைகளை மட்டுமே சுமந்து திரிந்த அவர்களது நிச்சயமற்ற வாழ்வைப் படம் பிடிக்கிறார்.

'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் கவிதைகள்' தொகுப்பில் இடம்பெறும் பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெரும்பாலும் சிங்கள ராணுவத்தினரின் கொடுஞ்செயல்களும், சித்திரவதைகளுமே பாடு பொருள்களாயிருக்கின்றன. அவற்றுள் துளியும் கற்பனை இல்லை என்பதுதான் இவற்றின் ஆகப்பெரிய வலியாகும்.

முடிவுரை

உள்ளதை உள்ளவாறே வெளிப்படுத்திட உதவுவது கலை வடிவம். அதில் தலையாயது எழுத்துக்கலை. எழுத்திலும் கவிதை வடிவம் ஆகச் சிறந்தது. நறுக்கு தெறித்தாற் போல் வாசகர் மனதில் விதையை ஊன்றுவது. வாசித்து நெடுங் காலத்திற்குப் பிறகும் தனது தடத்தைப் பதிய வைக்கும் மகத்துவம் உடையது. அவ்வகையில் தனது வாழ்வை, வலியை, உணர்வை வெளிப்படுத்தும் கவிதைகளாக இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் கவிதைகள் உள்ளன. அவற்றுள் ஒரு சில பெண் படைப்பாளர்களின் கவிதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு பகுத்தாய்ந்து இருக்கிறது இவ்வாய்வு. ஈழத்து மக்களின் குறிப்பாகப் பெண்களின் பாடுகளை பதிவு செய்திருக்கும் பெண் கவிஞர்களை இவ்வாய்வு அடையாளப்படுத்தி உள்ளது.

பார்வை நூல்கள்;

[1] ஸ்ரீ.பிரசாந்தன்(தோ.ஆ) 20 ஆம்- நூற்றாண்டு, ஈழத்துத் தமிழ்க்விதைகள், இலங்கை பூபாலசிங்கம் புத்தகசாலை, வைரவிழா வெளியீடு, 202,340, கடற்கரை சாலை கொழும்பு-11, ஸ்ரீலங்கா, முதல் பதிப்பு,அக் 2006.

[2] அறிவுமதி, வலி தமிழ்மண் பதிப்பகம், 2,சிங்கார வேலர் தெரு, தியாகராயர் நகர்,சென்னை-17 முதல் பதிப்பு,கார்த்திகை 2006.

[3] முனைவர் கோ.விசயராகவன், - புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும்,வாழ்வியலும்,

[4] முனைவர் கு.சிதம்பரம், புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்,

[5] முனைவர் இரத்தின,வெங்கடேசன்,உலக தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை-13